தத்துவச்சாறு

(கவிதைநூல்)

ஆசிரியர்
"மறையும் நிழல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAT TUVACI CARU

தத்துவச்சாறு

(ESSENCE OF PHILOSOPHY)

ஆசிரியர்

"மறையும் நிழல்"

286437

286437

JAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு — 1968

பிரதிகள் — 2000

விலை — 3 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

i சமர்ப்பணம்

ii தென் இந்திய எழுத்தாளர் நா. பார்த்தசாரதி அவர்களின் அணிந்துரை

iii பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் மதிப்புரை

iv ஆசிரியர் முகவுரை

1 மெய்யா இல்லை

2 தேசிய ஒற்றுமை

3 சிந்தனையுடன் செயற்படு

4 ஒளிப் பாதை

5 இளமை கரைதல்

6 திசை திருப்பல்

7 போதனையும் சாதனையும்

8 மறை சக்தி

9 எல்லாமுனக்கே எழுந்தியங்கு இன்றே

10 இளமையின் துடிப்பில்

11 இதயக் குரல்

12 என் தாய்

13 இலட்சிய மனைவி

14 களங்கமில் உள்ளம்

15 மறையும் நிழல்கள் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை திருத்தம்

UNIVERSITY OF CEYLON
1972
LIBRARY

பாடம்	பிழை	திருத்தம்
	மணிக	மணிக
அணிந்துரை	புணேப்பெயர்	புனைப்பெயர்
மதிப்புரை	கூறுதலே	கூருதலே
,,	உணர்சிப்	உணர்ச்சிப்
,,	இத்த	இந்த
,,	பிரதிபளிப்பன	பிரதிபலிப்பன
	இத்தகை	இத்தகைய
முகவுரை	பெயரிட காரணம்	பெயரிடக்காரணம்
	காலகலாசாலை	காலக்கலாசாலை
	மேல்ப்பக்க	மேல்பக்க
முகவுரை	புணேபெயருடன்	புனைபெயருடன்
,,	உயிரிடம்	உயரிடம்
	விட்டுபறக்கவே	விட்டுப்பறக்கவே
	கருத்துக்கள்	கருத்துக்களை
	ரசித்து	இரசித்து
	விடைபெருகிறேன்	விடைபெறுகிறேன்
பாடல் 1	முருவலான	முறுவலான
	அறிவுலார்க்கு	அறிவுளார்க்கு
	காணல்	கானல்
	பண்ணேடு	பண்ணோடு
பாடல் 2	மதஸ்தவர்களும்	மதத்தவர்களும்
	நம்மீழ்நாட்டில்	நம்மீழநாட்டில்
	நன்றுனே	நன்றுடனே
	உருப்பினரை	உறுப்பினரை
	நம்மினத்தை	நம்மினத்தைப்
	எழுதிடுவோம்	எழுந்திடுவோம்
	பள்ளிதோரும்	பள்ளிதோறும்
பாடல் 3	குலப்பெயறால்	குலப்பெயரால்
	ஆமி	ஆழி
	புண்மைமிகு	புன்மைமிகு
பாடல் 5	நண்மை	நன்மை
	முன்றதை	முயன்றதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்	பிழை	திருத்தம்
பாடல் 6	வெடித்தெலும்பிய	வெடித்தெழும்பிய
பாடல் 7	நண்மை	நன்மை
	ஆயுதம்	ஆயும்
	செயவலவில்	செயலலவில்
	கனேவோம்	களேவோம்
பாடல் 8	அடையசெய	அடையச்செய
	வாணத்தின்	வானத்தின்
	நாளத்தின்	நாலத்தின்
பாடல் 9	அளிப்பாய்	அழிப்பாய்
பாடல் 10	வடுக்கலால்	வடுக்களால்
	உண்ணத்தின்	எண்ணத்தின்
	குறிக்கோலாக	குறிக்கோளாக
	மறந்துத்தாக	மறந்து -தாக
	கிருக்கி	கிறுக்கி
பாடல் 11	தமையை	தீமையை
	நயே	நீயே
	எண்ணிசெயற்படு	எண்ணிச்செயற்படு
பாடல் 12	வைகரையில்	வைகறையில்
	அகத்தினிகே	அகத்தினிலே
பாடல் 13	ஆுனுக்கு	ஆணுக்கு
	வைகரையில்	வைகறையில்
பாடல் 13	நண்ணெறி	நன்நெறி
	பெண்ணும்	பெண்ணும்
	எத்தனே	எதனே
பாடல் 14	மலலேயை	மழலேயை
	புன்குரும்மை	புன்குறும்பை
	மலேயின்	மழலேயின்
	கிளப்	கிழப்
பாடல் 15	நாலஓட்டம்	நாளஓட்டம்
	பறட்பன	பறப்பன
	நிந்தும்	நீந்தும்
	நிழலகள்	நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச ம ர் ப் ப ண ம்

மரண - அவஸ்தை என்று கூறக்கூடிய பிரசவ வேதனையில் என்னைப்பெற்று, வளர்த்து, கற்கவைத்து ஒழுக்கங்களைப் போதித்து நல்வழியில் நடக்கச் செய்த என்னன்புத் தாயாருக்கு இக்கவிதை நூலைச் சமர்ப்பிக்கின்றேன். இந்நூலின் 12 வது பாடல் எம்மருமை அன்னையின் நினைவாகவே பாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் இந்திய எழுத்தாளர் நா. பார்த்தசாரதி அவர்களின் அணித்துரை

தற்காலக் கவிதைகளில் எளிமை முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. பிறருக்குப் புரிய வேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுவிட்டனர் இன்றைய கவிஞர்கள். சொல்லிலே எளிமை, நடையிலே எளிமை, பொருளிலே எளிமை என்று அனைத்திலும் எளிமையே பிரதானமாகக் கருதப்படும் நூற்றுண்டில்தான் இந்தக் கவிதைத் தொகுதியும் வெளிவருகிறது. ''தத்துவச்சாறு'' ஆசிரியர் ''மறையும் நிழல்'' என்னும் புனைப் பெயரையுடைய மாத்தளை சாஹிரா கல்லூரி ஆசிரியரான திருவாளர் யு. எல். எம். குவைலீத் அவர்கள், பழக இனிய சுபாவமுடையவர். அவருடைய கவிதைகளைப் போலவே எளிமையானவர்; இனிமையானவர்.

''நிலையற்ற வாழ்வினது உண்மையினை
நிரந்தரமாய் ஆய்வதுவே என் கவியாம்''

என்று இத்தொகுதியில் ஓரிடத்தில் தம்முடைய இலட்சியத்தைக் கூறியிருக்கின்றார் இவ்வாசிரியர். நிலையற்ற வாழ்வு என்ற பதச் சேர்க்கைக்கும் நிரந்தரமாய் என்ற பதச் சேர்க்கைக்கும் நடுவே உள்ள முரண்தொடை நயம் நன்ருக வாய்த்திருக்கிறது. ''சொல்வதிலும் நடப்பதிலும் ஒற்றுமை காண்போம்'' என்று ஓரிடத்தில் பாடி வைத்திருக்கும் வரியில் மனித சமுதாயத்தின் கண் இவர் எதிர்பார்க்கும் ஒற்றுமைத் தத்துவம் நன்கு விளங்குகிறது.

''புத்துலகை அமைக்க உன்னும்
புகழ்விளைந்த இளைஞா!''

என்று இளைஞர் சமூகத்தை இவர் அழைக்கும்போது உணர்வு பொங்குகிறது. ஆசிரியர் ''குவைலீத்'' தின் ஆர்வம் எல்லாக் கவிதைகளிலும் தெளிவாகத் தெரிகிறது. ''இதயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்'' என்ற கவிதையில் ஆத்ம வேதனை தெரியும்படி எழுதப்பட்டிருக்கிறது. கவிதை யாவும் வசனத்தின் எளிமையோடும், கவிதையின் அழகோடும் அமைக்கப்பட்டுள்ளன நவீன சமூகத்திற்குரிய சிந்தனைத் தத்துவங்களே கவிதைகளாக்கப்பட்டிருப்பதால் கவிதை நடையும் நவீனபாணியிலேயே அமைந்திருக்கிறது போலும். ஒவ்வொரு கவிதைக்கும் ஓவிய விளக்கமும் தந்திருப்பது புதுமை. கவிதையை ஓவியங்களாலும் சேர்த்து விளக்க முயன்றிருக்கும் ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டியே ஆக வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண விரும்பும் விவேகமான தத்துவம் கவிஞரின் ஆசையாயிருக்கிறது. ''வேற்றுமையில் ஒற்றுமை'' தொடர்பிலேயே அபூர்வமான தத்துவம் நிரம்பியுள்ளது. கவிஞர் இதுபோல் இன்னும் பல சீரிய கவிதைத் தொகுதிகளை அளித்துத் தமிழுக்குத் தொண்டு செய்ய இறையருள் துணை நிற்குமாக.

நா. பார்த்தசாரதி.

6, நல்லதம்பிச் செட்டித் தெரு,
மவுண்ட் ரோட்,
சென்னை 2.
தென் இந்தியா.
3-10-68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர்

ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் மதிப்புரை

''மறையும் நிழல்'' என்ற புனைப்பெயர் கொண்ட இளைஞர் யு. எல். எம். குவைலீத் அவர்களின் ''தத்துவச்சாறு'' என்னும் இக்கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதும் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு உவகையடைகின்றேன்.

தமிழ் நாட்டிற் சரி இலங்கையிற் சரி கவிதை நூல்கள் வெகு அரிதாகவே இப்பொழுது வெளிவருகின்றன. கவிதையின் காலங் கடந்து விட்டதோ என்று ஐயங்கூடச் சிலரிடையே எழுந்துள்ளது. இந்தச் சூழல் தமிழ் மொழிக்கு மட்டும் உரிய தொன்றன்று. பிற மொழிகளிலும் நிலைமை இவ்வாறேயுள்ளது.

அமைதியின் நிலையில் ஒய்ந்திருந்து உணர்ச்சிப் பெருக்கினை நினைவு கூறுதலே ''கவிதை'' "Poetry is emotion recollected in transquility" என்பதனுல் போலும். அவசரயுகமாகிய இத்த யுகத்தில் கவிதைத்துறை மெல்ல ஒடுங்கி வருகிறது. இத்தகைய பின்னணியிலே வெளிவரும் ''தத்துவச்சாறு'' வரவேற்கப்படவேண்டிய தொன்றுகும். தத்துவச்சாறு ஆசிரியரின் கன்னிப் படைப்பு, அவருடைய முயற்சிக்கு ஆதரவளித்து ஆற்றலை ஊக்குவிப்பது எமது கடமையாகும்.

இந்நூல் சிறப்பாக இளைஞர்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் எளிய, இனிய சொற்களால் புனையப்பட்ட கவிதைகளை உள்ளடக்கியிருக்கிறது. இறைபக்தி, தேசிய ஒற்றுமை ஆகிய மேலான இலட்சியங்களை கவிதைப் பொருளாகத் தேர்ந்துள்ளமை ஆசிரியரின் மனவிசாலத்தையும், உணர்ச்சிப் பெருக்கையும், புலப்படுத்துகின்றன. இக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக ஆசிரியர் வலியுறுத்தும் கருத்துக்கள் இறைவாக்காம் திருக்குர்ஆனிலும், இக்பாலின் இலக்கியத்திலும் அவருக்கிருக்கும் பற்றுதலைப் பிரதிபளிப்பனவாக வுள்ளன. இத்தகை பண்பை சினிமா ஆதிக்கஞ் செலுத்தும் இந்நாட்களில் இளங்கவிஞர் ஒருவரிடம் காண்பது தென்பளிப்பதாகவுள்ளது.

இந்நூலுக்கு நாம் அளிக்கும் வரவேற்பினுல் ஆசிரியர் யு. எல். எம். குவைலித் அவர்கள் ஊக்கம் பெற்று எதிர்காலத்தில் மேலும் பல சிறந்த கவிதை நூல்களை இயற்றித் தர எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவாளுக.

ஏ. எம். ஏ. அஸீஸ்.

''மெடோ கவீற்'',
பாண்ஸ் பிளேஸ்,
கொழும்பு 7.
25-8-68.

UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

தத்துவம் என்பது யாது? என்ற வினவிற்கு அறிஞர்கள் பலர் தாம் தாம் விரும்பும் உயர்கருத்துக்களை விடைகளாகக் கொடுத்துள்ளனர். பொதுவாக எல்லா அறிஞர்களதும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்குமிடத்து ''உயிர், உடல், உள்ளம் என்பவற்றேடு மறைந்து கிடக்கும் நிரந்தரமான ஆழ்ந்த உண்மையை ஆழ்ந்த கருத்தோடு வெளிப்படுத்தலே தத்துவம்'' என்று கூறலாம்.

இதனையே தத்துவஞானி ஒருவர் ''இருண்ட வீட்டுக்குள் மறைந்து கிடக்கும் ஒரு கறுப்புப் பூனையை இரண்டு கண்களுமில்லாத ஒரு குருடர் தேடிக் கண்டுபிடித்தலையே தத்துவம்'' என்று கூறுகின்றார். இதிலிருந்து உண்மையை வெளிப்படுத்த எவ்வளவு ஆழ்ந்து செல்லல் வேண்டும் என்று தெளிவாக விளங்குகின்றது. இங்கு யான் படைத்திருக்கும் பதினைந்து பாடல்களிலும் நித்தியமான உண்மைகள் சிலவற்றை நிரூபிப்பதற்கு முயன்றுள்ளேன். ''எமது வாழ்க்கைப் பிரயாணம் தற்காலிகமானது. உலக இன்பங்கள் நிரந்தரமானதல்ல, ஒரு நீண்ட பிரயாணத்தின் தொடக்கமும், தொடர்ச்சியுமே இவ்வுலக வாழ்க்கை. தூய்மையான, பரிசுத்தமான எண்ணங்களும் செயல்களுமே தூயபயனைத் தரவல்லனவாகும்!! என்பன போன்ற சில நித்திய உண்மைகளை கவிதைகளின் சாருக வடித்தேன். அந் நினைப்பே இக் கவிதை நூலுக்கு ''தத்துவச்சாறு'' என்ற பெயரிட காரணமாக அமைந்தது என்று கூற வேண்டும். எனது இந் நினைப்பில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளேன் என்பதை வாசகர்களே கூறல் வேண்டும்.

இதனைக் கூறும்போது எனது கடந்தகால கலாசாலைக் காட்சிகள் என் கண் முன் வருகின்றன. அப்போது எனக்கு வயது 19 இருக்கும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளும் உள்ள ஒரு விடுதியில் யான் தங்கியிருந்தேன். அப்போது நான் தலையை முழுக்க மொட்டை அடித்திருந்தேன். எனது படுக்கை விடுதியின் மேல்பக்க வலது மூலையில் இருந்தது. எனது படுக்கைக்கு முன்னே ஒரு யன்னல் இருந்தது.

அந்த யன்னலின் மேலே ''மறையும் நிழல்கள் நாம்'' என்று எழுதி யிருந்தேன். என் படுக்கையிலே தூய வெள்ளைத் துணியை விரித்து அதிலே அமைதியுடன் உட்கார்ந்து ஆழ்ந்த கருத்துக்கள் எதையாவது எழுத்தில் வடிப்பது என் அப்போதைய வழக்கம்.

என்னைப் பார்க்கவும், உரையாடவும் வரும் நண்பர்கள் யன்னலிலுள்ள வார்த்தைகளை வாசிக்காமல் என் பக்கத்தே அமர்வதில்லை அங்கு வைத்து ஏறக்குறைய ஒருவருடகாலமாக அவர்களில் பலர் ஏறக்குறைய 200 நண்பர்கள் என்னைத் ''தத்துவம்'' என்றும் ''மறையும் நிழல்'' என்றும் அழைத்தது என் உள்ளத்தில் பலமுறை நன்முறையில் ஆழ்ந்த கருத்தோடு பதிந்துவிட்டது. இப் புத்தகத்துக்கு ''தத்துவச்சாறு'' என்ற பெயரிடவும், என் புனைப்பெயராக ''மறையும் நிழல்'' என்று யான் வைத்துக் கொள்ளவும் அடிப்படைக் காரணங்கள் என் நண்பர்களது அன்புக்குரிய அழைப்புக்களே என்று கூறின் அது மிகையாகாது.

மேலும் இக்கவிதை நூலின் ஒவ்வொரு பாடலும் நிரந்தரமான பல உண்மைகளை ஆழ்ந்த கருத்தோடு வெளிப்படுத்துவதனால் ''தத்துவச்சாறு'' என்று யான் இதற்குப் பெயரிட்டுள்ளமை பொருத்தமானதாகும். என அடியேன் கருதுகின்றேன் ''மறையும் நிழல்'' என்று பெயரிட இன்னும் பல காரணங்கள் உண்டு. உடல் இருக்கும் வரையும் நிழல் உண்டு. உயிருக்கு நிழல் இல்லை. உடலின் நிழல் மறையவே போகின்றது. உயிர் உடலை விட்டு பறக்கவே இருக்கின்றது. இது இயற்கைச் சட்டமாகும். ஆகவே அழியப் போகும் இவ்வுடலுக்கு ''மறையும் நிழல்'' என அழைப்பதே பொருத்தமானதாகும் எனக் கருதுகிறேன். உலகில் உள்ள ஒவ்வொரு படைப்பும் மறையும் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே? இக் கவிதை நூலின் 15 வது பாடல் இதை இன்னும் நன்ருக விளக்கக் கூடும். மேலும் — உலகிலுள்ள தத்துவங்கள் — அனைத்தையும் சாருகப் பிழிந்தால் அனைத்தும், ''மறையும் நிழல்'' என்ற அடிப்படையே தான் அதன் கூட்டுக் கூட்டுக் கருத்தாக இருக்கும்.

அடுத்து இப்பாடல்களைத் தொகுத்திருக்கும் முறை பற்றி சில வரிகள் கூற வேண்டுமென நினைக்கின்றேன். மனித செய்கைகள் அனைத்தும் இறைவனின் நாமத்தைக் கொண்டே ஆரம்பிக்க வேண்டுமாதலால் முதற் பாடல் இறைவனைப் பற்றியதாகவும், மனிதனின் முடிவு இறப்போடு முடிவடைகின்றதாதலால் கடைசிப் பாடல் ''மறையும் நிழல்கள் நாம்'' என்ற பாடலாகவும் இடையிலுள்ள பாடல்கள் மனித வாழ்க்கையைப் பற்றிய பாடல்களாகவும் வரிசைப்படுத்தியுள்ளேன்.

பின்னர் ''தேசிய ஒற்றுமைக்குச் சிந்தனையுடன் செயற்பட்டு ஒளிப்பாதையில் செல்ல வேண்டும். இளமை கரைவை நினைத்துத் தம் தீய உணர்ச்சிகளைத் திசை திருப்ப வேண்டும் உள்ளத்திலுள்ள மறை சக்தியை வெளிப்படுத்த இன்றே எழுந்தியங்க வேண்டும்'' குறிப்பாக இளைஞர் உயிரிடத்தை அடைய இளமையின் துடிப்படக்கி உண்மையான தம் மிதயக் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும் ஆகிய கருத்துக்கள் முறையே 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 ஆகிய பாடல்களில் அடக்கி விளக்கியுள்ளேன்.

மேலும் ''ஒரு ஆண் தாய்க்கு முதலிடத்தையும் மனைவிக்கு இரண்டாம் இடத்தையும், குழந்தைக்கு மூன்ரும் இடத்தையும் கொடுக்க வேண்டும்'' என்ற காரணத்தினுல் மனைவியைத் தாய்க்குப் பின்னுகவும், குழந்தைக்கு முன்னதாகவும் ஆக்கியுள்ளேன். 12, 13, 14 ம் பாடல்கள் இதனை நன்கு விளக்கும்.

அவை நிற்க இன்றைய நவீன இளைஞர்களுக்கு நற்புத்தி புகட்டவும் அவர்களைத் தூய்மையான வழியில் நடத்திச் செல்லவும், அவர்கள் தம் தனித்துவத்தை நிலைநாட்டவும், இக் கவிதைகள் அவர்களுக்கு நிறைந்த உதவியளிக்கும் என்பதை யான் உறுதியாகத் துணிந்து கூறுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இக்கவிதைகளை ரசித்து, வாசித்து, இந் நூலுக்கு அணிந்துரை தந்தவரும், 16 நாவல்கள், 12 சிறு கதைகள், 7 கவிதைக் கட்டுரை ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்டவரும், தற்போது இலங்கை, இந்தியா, சிங்கப் பூர் ஆகிய நாடுகளில் விற்பனையாகும் ''தீபம்'' என்ற மாத சஞ்சிகையின் ஆசிரியரும், தென் இந்தியப் பேரறிஞருமாகிய திரு நா. பார்த்தசாரதி அவர்கள் தமது மகிமைபொருந்திய நேரத்தையும் கருதாது எனது இக்கவிதை நூலுக்கு அணிந் துரை அளித்து என்னை மகிழ்வித்தமைக்கு நன்றிகூற கடப் பாடுடையனுவேன்.

அவ்வாறே முன்னையநாள் கொழும்பு சாஹிரா கல்லூரி அதிபரும், செனட்டரும், தற்போதைய பொதுச் சேவை ஆணைக் குழுவின் அங்கத்தவருமாகிய உயர்திரு ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் இக்கவிதைப் புத்தகத்தை வாசித்துத் தமது மதிப்புரையை அளித்தமைக்காக யான் நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இக்கவிதைகள் ஒவ்வொன்றிட்கும், எம் கருத் துக்களுக்கேற்ப இலவசமாக படம் வரைந்து உதவியளித்து என்னை ஊக்குவித்த என் இனிய நண்பரும், மாத்தளை சாஹிராக் கல்லூரி ஆசிரியருமான ஜனுப் ஹனிபா அவர் களுக்கும், நான் வேண்டியபோதெல்லாம் இந்நூலின் பிரதி கள் பலவற்றை எழுதி எனக்குச் சமர்ப்பித்த என்னன்புக் குரிய மாத்தளை சாஹிரா கல்லூரி மாணவன் எச். எல். எம். இல்யாஸ் அவர்கட்கும் எம் தூய நன்றி உரித்தாகட்டும்.

இறுதியாக எம் வேண்டுகோளுக்கிணங்க நன்முறையில் இக்கவிதை நூலை அச்சிட்டு வெளியிட உதவியளித்த ''அல்பியன்'' அச்சகத்தாருக்கும் என் ஆழ்ந்த நன்றியை நவின்று வாசகரது தூய அருட்பார்வை எமது வெளியீட் டுக்கு எப்போதுமுண்டு என்ற நம்பிக்கையுடன் விடை பெரு கின்றேன்.

ஆசிரியர்
யு. எல். எம். குவைலீத்,

''உதுமான் மன்ஸில்'',
மார்க்கொனை,
உக்குவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

மெய்யா இல்லை

(தமிழ், சிங்களப் புதுவருட ஹஜ்ஜிப் பெருநாள் கொண் டாட்ட விழாவை முன்னிட்டு 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ம் திகதி மாத்தளை பிரசித்த மைதானத்தில் நடாத்தப்பட்ட வைபவங்களில் தமிழ் கலைஅரங்குப் போட் டியில் முதன்மைபெற்ற கவிதை-இது தினகரன் பத்திரிகையில் 7-5-1965 அன்று பிரசுரிக்கப்பட்டது.)

''அனைத்துமே பொய் இறைவனே உயர் மெய்'' என்ற தத்துவத்தை நிரூபிகக, வெண்ணிலவு, ஆழ்கடல், விண்மலை விரைகாலம் அனைத்தையும் உதாரணம்காட்டி உணர்த்து சின்முர் இளங்கவிஞா.

மும்மினத்தின் முருவலான முத்தினத்தை
முப்பெருநாள் விழாவாகச் கொண்டாடும் வேளையிலே
''எம்மதமும் எம்மதமே'' என்றியம்பும்.
இவ்வடியேன் கூறுகின்றேன் ஏற்றிடுவீர்.

நம்கலைகள் நிறைஉயர நாமென்றும்.
நம்கடமை நல்கிடுவோம் மறநினையோம்.
சம்மதமும் கலைபலவும் நிறைஉயர அழைக்கின்றேம்.
சாரலாக ஓடிவாரும் உழைத்திடுவோம்.

கலைஅரங்கின் தலைமன்னு! கவிஞர்காள்!
கறையற்ற நீதியினை நிலைநிறுத்த,
தலைவர்களாய் வந்திருக்கும் தகைமையோரே
தரமுள்ளநிறை உறுதி கொண்டுள்ளேன்,

286437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிருந்தால் தரமிருந்தால் தந்திடுங்கள்.
நன்றின்றேல் கூறிடுங்கள் கருத்தினையே
நிலையற்ற வாழ்வினது உண்மையினை.
நிரந்தரமாய் ஆய்வதுவே என்கவியாம்.

கண்முன்னே தெரிவதெல்லாம் உண்மையல்ல
கணக்கற்ற மறைக்காட்சி அங்குஉண்டு.
பண்ணோடு எல்லாம் நாம் ஓர்ந்து பார்த்தால்,
பாடங்கள் கணக்கின்றி பயிலலாம் நாம்.

விண்மீது தவழ்ந்துவரும் வெண்ணிலவில்
விரிந்திருக்கும் ஒளிநிலவு மெய்யா? இல்லை
விண்மீனின் கண்சிமிட்டல் விளையாட்டெல்லாம்.
விரிந்திருக்கும் அறிவுலார்க்குத்தெரியுமன்றோ,

அலைவீசி ஒலி எழுப்பும் ஆழியினை,
அமைதி நிறை ஆழியென யாம் நினைப்பின்
மலைபோன்ற திரவியங்கள் அதனகத்தே
மறைந்திருக்கும் அதிசயத்தை என்னவென்போம்

தலைஒக்க நிறை உண்மை பின்னிற்க;
தன்முன்னே தெரிவதெல்லாம் மாயையன்றோ
கலைவாழ்வு வாழயாம் நன்நினைப்பின்,
கருத்தாவின் கருத்தினையே பெறநினைப்போம்

விண்முட்ட உயர்ந்திருக்கும் மாமலையில்,
விரிவான கற்பாறை உண்டு என்று
திண்ணாக நினைத்துநாம் கிட்ட சென்றால்
தெரிவதெல்லாம் மரங்களன்றி வேறொன்றில்லை

மண்மீது காணுகின்ற இன்பமெல்லாம்
மரணமுடன் முடிவதன்றி நிலைப்பதல்ல
மண்ணுளை மனிதரது நினைவு எல்லாம்
மாண்பற்ற கானல்நீரே! மாயையன்றோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்தில் உண்மையாய் இருந்திறந்த:
இதயங்கள் கூறும் நல்லொளியை நாங்கள்,
வண்ணமாய்ப் படித்து நண்குணருவோமானல்,
வாழ்நாளில் மெய்யை இன்றே கடைப்பிடிப்போம்.

கண்முன்னே கரைந்துவரும் காலம் கூட
கனவான பொய்யேயன்றி மெய்யல்ல வென்று,
விண்ஞானி ஈன்ஸ்டீனின் தத்துவங்கள்,
விளக்குவதை நாம்நன்கு ஆய்ந்துபார்த்தால்,

எண்ணற்ற எண்ணங்களை விட்டுவிட்டு,
இதயத்தில் ஒருவனைநாம் இருத்திக் கொண்டு,
எண்ணற்ற படைப்புகளைப் படைத்துக் காக்கும்,
இறைவனே உயர்மெய்யென்று உரக்கச் சொல்வோம்,

—✶ ✶—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

தேசிய ஒற்றுமை

(28-7-65) மாலை 8- 00 இலிருந்து 8-15 மணிவரையும் இலங்கை தேசிய வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் நடைபெற்ற ''கவிதை மஞ்சரிககு'' அனுப்பப்பட்ட கவிதை இது. அகில இலங்கை தேசிய ஒருமைப்பாட்டுச் சங்கத்தின் பாராட்டைப் பெற்ற தமிழ் கவிதையும் இதுவேயாகும்.

''பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய நான்கு மதஸ்தவர்களும், இலங்கையிலே தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த என்னசெய்யலாம்!!? என்ற வினவுக்குத் தாம் நினைக்கும் நல்லனவற்றை விடையாகத் தருகிறார் கவிஞர்.

நாலினங்கள் வாழும் நம்மீழ்நாட்டில்,
நன்றுனே அன்புடனே வாழ நாங்கள்,
நாலினத்தின் உருப்பினரை உண்மையாக,
நம்பியான் அழைக்கின்றேன் ஓடிவாரும்.

இனத்தினிலே, மொழியினிலே, தொகுதியிலே,
எம்மவர்யாம் பிரிந்திடினும் நாங்களெல்லாம்,
நினைத்திடுவீர்! உறுதியாக ஈழமே எம்,
முயிரான தாய்நாடாம் ஐயமில்லை.

ஈழமே யாம்பிறந்த உயிர் நாடெனும்,
எஃகுறுதி இரத்தத்தில் ஒன்றிருந்தால்,
ஆழமாம் தாய்ப்பற்று ஆர்வத்தில்யாம்,
ஐக்கியமாம் எம்நாட்டை உயர்த்திடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிவாழும் நம்மினத்தை பிரித்துவைக்கக்
கொடுமைநிறை அடுத்தநாட்டான் முயலுகின்ருன்,
நாடிவாழும் நாங்களவன் நரம்பொடித்து,
நம்மினத்தை உயர்த்தநாங்கள் எழுதிடுவோம்,

நாடுயர, நாமுயர வளங்கொளிக்க
நம்பகைகள் மறந்துநாங்கள் ஒருமையுடன்
காடுவெட்டி, நிலந்திருத்திப், பயிர்வளர்த்து,
கட்டுக்கட்டாய் பொருளனுப்ப உழைத்திடுவோம்,

நாட்டினிலே ஒற்றுமையை ஏற்றுவதில்,
நாடுபுகழ், தினசரியும், வானெலியும்,
காட்டும் நற்பணியினைப் போல் உண்மையுடன்
கடமையுடன் ஒழுகிவர நினைத்திடுவோம்.

எடுக்கும் நல்திரைப்படத்தை உயர்படமாய்,
எல்லோரையும் இணைக்கும் நற்படமாய்,
அடுக்கான ஒற்றுமையின் கருத்தமைய,
அடுக்காகப் படங்களையாம் எடுத்திடுவோம்.

கோயில்களில், பள்ளிகளில், பன்சலையில்,
கொண்டாட்ட உயர்தினத்தில் போதனையில்,
ஒய்வற்ற உற்சாகங் கொண்டு நல்ல,
ஒற்றுமையின் உயர்வதனை உரைத்திடுவோம்.

மததினங்கள் பொதுதினமாய் இருப்பதுபோல்,
மாற்றமான அனைவர்க்கும் அழைப்பனுப்பி,
அத்தினத்தை ஒற்றுமையின் உயர்தினமாய்
ஆக்கும் நல்நடவடிக்கை எடுத்திடுவோம்.

அரசினர் திட்டும் பல சட்டங்களில்,
அவசியமாய் கல்வியது திட்டத்தில்நாம்,
தரமுள்ள ஒற்றுமையை வளர்க்கும் நல்ல,
தரமான நடைமுறையை இணைத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகளின் பாடங்களின் புத்தகத்தில்,
பயன்கருதா ஒற்றுமைக்குச் சேவைசெய்த
நல்லொழுக்கப் பெரியார்கள் வரலாறினை,
நடுவினிலே, இடையினிலே சேர்த்திடுவோம்.

பல்வேறு இனத்துவ பாலகர்கள்,
பண்பினோடு அன்பினோடு இணைந்து கற்கக்,
கல்லூரி தரத்தினிலே பன்னூறு நற்
கலைக்கூடம் ஈழத்திலே அமைத்திடுவோம்.

நகரங்கள், கிராமங்கள், பள்ளி தோறும்,
''நல்லொருமை மன்றங்கள்'' நிறுவிநாங்கள்,
நிகரற்ற தேசிய நல்லொருமையது,
நற்கொள்கை உண்மையினைக் கண்டிடுவோம்.

பேச்சுக்கள், கவிதைகள் நாடகத்தில்,
பேசுவது ஒற்றுமையே என்றுவைத்து
ஏச்சுக்கள் கூச்சல்களின்றி நாட்டை,
ஏற்றமதாய் உயர்வினதாய் படைத்திடுவோம்.

மக்களால் மக்களுக்குத் தெரிவுபட்ட,
மக்களின் தலைவர்தம் தொகுதிகளில்,
ஐக்கியத்தை நாலினத்தில் ஏற்படுத்த,
ஆனவைகள் விரைவினிலே ஆற்றிடுவோம்.

மதப்பெயரால், குலப்பெயரால், தொழிலினையாம்
மதித்திட்டுப் பதவிகளை வழங்கிடாது,
இதயத்தின் திறத்துக்கே தொழிலளித்து
ஈழத்தில் உண்மையினைக் கண்டிடுவோம்.

''அயலான் பசித்திருக்கப் புசியாதென''
அகிலத்தின் உயர் பெரியார் அறைந்ததுபோல்,
தவறாது நாமென்றும் நடந்து எங்கள்
தாய்நாட்டின் பசிநீக்கி உயர்த்திடுவோம்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டிடபல்'
வேறுபாடு அத்தனையும் மனஞ்சகித்து,
ஏற்றமிகு தேசிய நல்லொருமையினை,
இயன்றவரை உயரிடத்தில் ஏற்றிவைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

சிந்தனையுடன் செயற்படு

கோலங்கள், தன்னைச் சுற்றியிருக்க, மண்ணிலுள்ள அற்புதங்கள், தன்னைச் சூழ்ந்திருக்க, சிந்தனை செய்யாமல் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மனிதனைத்தட்டி எழுப்பி ''சிந்தனையுடன் செயற்படு'' என்று ஊக்குவிக்கின்றார் கவிஞர்.

அறிவுமிகுமனிதா! அகிலமெலாமுனக்கே.
 ஆமிமலைமேடு பாலைவனஞ் சோலை,
செறிவு நிறை வெள்ளி சிறந்ததெல்லாமுனக்கே
 சீர்மிகுந்த அறிவால் சிந்தனையே செய்வாய்

கோலமிகுகாட்சி' தேய்ந்துமறை திங்கள்,
 கூட்டுஇனஉயிர்கள் பாடிவளர் பறவை
ஓலமிடும்படைப்பு ஒவ்வொன்றுமுனக்கே
 ஓர்மைமிகுமனத்தால் ஊகித்தறிவாயே

கண்ணில் வருதண்ணீர் காற்றில்மறைசத்தம்
 காலம்மாறும்விந்தை கருத்துசுவை விருந்தே.
மண்ணில் வளர்பயிர்கள், மாறிவிரைபருவம்
 மனத்தினுக் குண்மை அருளிதுவே என்றும்.

புன்மைமிகு எண்ணம்' பூசல்நிறை நடப்பு
 வேட்கைமிகு பழக்கம், வீணபழிகள்,
இன்னல்நிறையாவும், இத்தனையும் வீணே,
 சிந்தனையாய் நடந்தால் தொட்டதெல்லாம் தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண்விளையாட்டு, நேரம் போக்கும் போக்கு.
விருப்புமிகுபற்று வேதனையாம் புற்று.
சேய்மைநிறை நோக்கு சிந்தனையாம் செய்கை
செழிப்பான வாழ்வின் அடிப்படை இதுவே.

காண்பதெல்லாம் மனிதா! கருத்தாவின் படைப்பே
கருத்துனது என்றும் கருதிடுவாய் நன்றாய்.
வானவர்தம் நிலைக்கு மாற்றுவதும் நீயே.
வழுக்கிவிட்டால் வீணாய் போவதுவும் நீயே.

விதிஉனது கையில் விதைத்திடுவாய் இன்றே
வெற்றிநாளை உண்டு எழுந்திடுவாய் நன்றே
சிரித்திடுவாய் வாழ்வில், துக்கம் துயர் இல்லை.
செயல்படுவாய் இன்றே உனக்கரசன் நீயே.

ஏது செய்திடினும் நினைத்திடுவாய் நன்றாய்.
இறைவன் ஒன்றுண்டு இறப்பு ஒன்றுண்டு
நீதி ஒன்றுண்டு நேர்வழி ஒன்றுண்டு
நாளைமறுநாள் உண்டு தீர்ப்பு அங்குண்டு.

—★ ★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

ஒளிப் - பாதை

(இளைஞர்களது வெற்றியும் முன்னேற்றமும் அவர்கள் நடந்துசெல்லும் பாதையைப் பொறுத்திருக்கின்றது என்பதைக் குறித்து ஒளிப்பாதையில் செல்ல ஊக்குவிப்பதே இப்பாடலின் நோக்கம்)

புத்துலகை அமைக்க வுன்னும்
புகழ்விளையும் இளைஞா!
உத்தமனுய் புத்துணர்ச்சி,
உளத்தில் நீ பெற்று,
புத்துலகின் முத்துக்களில்,
முதலணியில் சேர,
சுத்தமான என்கருத்தைச்
சாற்றுகிறேன் ஏற்பாய்.

''வித்தகனுய் நித்தியமாய்
இருந்தாலே வாழ்வு
வித்தகைகள் பற்பலவும்
படித்தாலே காலம்''
நிச்சயமாய் இவையெல்லாம்
நம்பாதே என்றும்
மிச்சமென்ன? ஒழுங்கங்கு
உண்டா இதேகேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் ஒழுக்கத்தை,
ஏற்றிக் கொள் இன்றே.
துள்ளுகின்ற இளமையை,
தூய்மையாக்கு நன்றே.
கள்ளெண்ணம் விட்டகன்று,
கருமமாற்று சென்றே.
பள்ளத்தை வள்ளத்தால்,
கடத்திடு கரை வென்றே.

சித்தர்களும் ஞானிகளும்,
சென்ற நல்வழியில்,
இதயத்தை இயக்கிவிட,
எம்முளம் முயன்றால்,
சிதையாதப் புத்துணர்ச்சி,
சீருகப் பெற்று,
இதமான ஒளி வழியில்
செயல்படலா மன்றோ.

புரட்சிநிறை கருத்துள்ள
பெருந்தலைமை ஏற்று,
உரமான உள்ளுணர்வை,
செயலாக்கு இன்றே,
திறமான ஒழுங்கோடு,
திருத்தமாய் நடந்து,
சிறப்பான உன்னிலக்கை
சென்றடைவாய் நன்றே.

வெற்றி வாழ்வு வாழவே
நீ பிறந்தாய் இங்கு
நெற்றிக்கண்ணன் வந்தாலும்
உன்னிலக்கைக் காட்டு
கற்றிருந்தால் சற்றேனும்,
பின்னடையார் என்றும்,
பற்றிருந்தால் நாளையே நீ
பெற்றிடுவாய் முத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி உனது கைகளிலே,
  விண்போக்கை வீழ்த்து.
மற்றையோர்கள் அபச் சொல்லை,
  மனமே நீ அகற்று.
உற்றோர்கள் நற் சொல்லை,
  உணர்ந்து நீ இயங்கு
சுற்றிலும் நல் நண்பர்களின்,
  சூழலோடு வாழ

இச்சைகளின் பற்றறுத்து,
  அச்சமின்றியங்கு
நிச்சயமாம் நோக்கோடு
  நேர்வழியை நாடு
பிச்சை கேட்டு வாழ்வதை
  அடியோடு நிறுத்து
மிச்சமென்ன நீள்வழியின்
  நற் செயலே இன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

இளமை கரைதல்.

(" இளமைக் காலம் கரைவது மிக விரைவு" என்பதை வலியுறுத்தி அவர்கள் நடக்க வேண்டிய வழிமுறையின் சாரத்தைச் சாற்றுகின்றது இப்பாடல்)

இளமையைப் பாரடா எத்தனை நாளடா?
இகத்தினில் வாழ்க்கையே பொய்யடா
இளமையை நண்மையால் உண்மையாய் நிரப்பி நீ
இறக்குமுன் சிறப் பினைக் காணடா

காலத்தைபாரடா? கரைவதை நோக்கடா?
காண்பதுயாவுமே கரைவது தானடா?
பாலத்தை உறுதியாய் வாழ்வினில் போட்டு நீ
பரமிற்குத் தொடர்பினை வையடா?

உணர்ச்சியை திருத்தடா உள்ளத்தை ஆயடா
உன்னையே அறிந்திட முயலடா
குணங்களை உண்மையாய் ஒழுக்கமாய் திருத்தி நீ
குவலயம் புகழ நீ உழையடா

ஆடலைக்குறையடா, ஆசையை ஓட்டடா
அகிலமே உன்வச மாமடா,
நாடலை உறுதியாய் உயர்ச்சியாய் எண்ணி நீ
நானையே முன்றதை அடையடா

— ✶ —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

திசை திருப்பல்

(மனிதன் தன் தீய உணர்ச்சிகளை நல்வழியின் பக்கம் திரும்பவும், நன்முறையில் இயங்கவும், அழைப்பு விடுக் கின்றது இப்பாடல்.)

ஓடிவரும் தண்ணீரை மதகுகட்டி,
உயரவரும் தண்ணீரை திருப்பல்போன்று
மீறிவரும் உணர்சியினை திசைதிருப்பி,
மேன்மையற்ற செயலினையாம் ஓட்டிடுவோம்

நாடிவரும் ஆசைகளை இயன்றவாறு,
நண்மைதரும் செயலினுக்குத் திருப்பிவிட்டால்
தாடிநரை வயதினிலும் இளமைநிறை
தரமுள்ள நல்வாழ்வு கிட்டுமன்றோ

பாடி உயர் கவிதைமூலம் நாட்டுவளம்
பண்படுத்த நல்முயற்சி எடுப்பதிலும்
நாடு நிறை நிலங்களிலே தம்முழைப்பால்
நல்லபயிர் செழித்திடயாம் முயன்றிடுவோம்

பேசிப்பேசி நேரம் நிறை போக்கலிலும்
பின்பற்றும் செயலினிலே லாபம் உண்டு
நேசங்காட்டி மக்களிலே ஒழுக்கமதை
நிலைநிறுத்தும் உயர்நாட்டை யாம்படைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

போதனையும் சாதனையும்

(சொல்ஒன்றும் செயல்ஒன்றுமாம் இருக்கும் இன்றைய மக்களைக் கண்ட கவிஞரின் உள்ளத்தில் வெடித்தெழும்பிய நினைவுகள் இவை)

படிப்பதுவும் எழுதுவதும்
   பக்திப்பாடல்கள்
பாடகனின் உள்ளத்திலோ
   காமப் பாடல்கள்
நடிப்பதுவும் நாடகமும்
   நல்லொழுக்கங்கள்
நடிகனது உள்ளத்திலோ
   வஞ்ச எண்ணங்கள்

வாழ்க்கையது உண்மையினை
   ஆயுதம்போது நாம்
வருவரெல்லாம் அழிவரிதை
   மறுக்க முடியுமோ?
தாழ்வினின்று உயரிடத்தை
   அடையவிரும்பின் யாம்
தரங்குறையா ஒழுக்க வாழ்வு
வாழ உன்னுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைசெய்ய நாட்டம் ஒன்று
  இருந்தால் போதுமா?
செயலவில் சேவை செய்து
  காட்டல் வேண்டுமே
தேவை என்ன? நாடுயர
  வீரம் தேவையா?
திருத்தமான உயர்வு காண
  தியாகம் தேவையா?

சொல்வதிலும் நடப்பதிலும்
  ஒற்றுமை காண்போம்
சோர்வு நீங்கி தாழ்வகற்ற
  வேசம் களைவோம்
கொல்லும் நல்ல எண்ணங்களை
  பற்றிப் பிடிப்போம்
குறைவைத்தரும் ஆசைகளை
  விட்டு உயர்வோம்

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

மறை சக்தி

("உள்ளத்தில் மறைந்திருக்கும் சக்தியை அறிந்து உயரிடத்தை அடைய, செயலாற்றவேண்டும்" என்ற கவிஞனின் கருத்தை பறைசாற்றுவதே இப்பாடல்களாகும்.)

உள்ளத்தில் களங்கம் யாவும்
    நீக்கப்பட்டால்
உயர்ந்தநிலை அடையாதாரும்
    உலகில் உண்டோ?
பள்ளத்தின் பாலத்தைக்
    கடப்பதற்கிறை
பக்தியைவிட
    கருவி ஒன்று வேறொன்றில்லை

கானகத்தின் ஆழத்திலே
    புதைந்திருக்கும்
கறுப்படர்ந்த கல்லையாம்
    தீட்டிப்பார்த்தால்
வாணத்தின் முத்
    தென்றெண்ணுமாறு
வண்மையுடன் ஒளிருவதை
    அறிகிலோமோ?

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமெனும் நாட்களினுல்
மறைக்கப்பட்ட
கருத்துக்களின் குவியல்களை
ஆயும்போது
நாலத்தின் ஓட்டமென
வாழ்வினுக்கு
நல்ல நல்ல காவியங்கள்
மிளிருதன்றோ

இருட்டான அறையினிலே
இருக்கையிலே
எல்லாமே கருமை நிறத்
தோற்றந்தானோ. ?
விருந்தாக உயரிடத்தை,
விரும்பினுல் யாம்
விரைவாக இருளகத்தை
ஒளியில் ஆய்வோம்

இளமையியே மறைந்திருக்கும்
சக்தியை யாம்
இதயத்தின் உயர்ச்சிக்குப்
பயன்படுத்தி
விளக்கமான வாழ்வினது
கருத்தினையாம்
வேகமாய் எம்வாழ்வில்
கடைப்பிடிப்போம்.

—✶—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

எல்லாமுனக்கே! எழுந்தியங்கு இன்றே.

(" அவனியின் படைப்பனைத்தும் உனக்கேயாகும் ஆராய்ந்து பார்ப்பது உன்கடமையாகும்" என்று இளைஞர்களைப் பார்த்துக் கூறும் கவிஞர், இவன்பிறந்த நோக்கம் கருமமாற்ற வேண்டிய முறைபற்றியும் வினாக்கள் வினவி சிந்திக்கவைப்பதுடன் செயலாற்றவும் தூண்டுகிறார்.

ஆழ்கடலின் அற்புதமு முனக்காக!
அகன்ற நீல வானமது முனக்காக!
ஏழவிரிகோலமது முனக்காக!
செங்கதிரும் அம்புலியு முனக்காக

பூமியது நீர்நிலமு முனக்காக!
ஊர்வனவும் பறவைகளு முனக்காக,
தூயதாய பிராணிகளு முனக்காக?
சுறு சுறுப்பாய் நீந்துவனவு முனக்காக

எண்திசைகள் வீசும் காற்று முனக்காக!
இயங்கும் எல்லா படைப்புகளுமுனக்காக!
இத்தனையும் ஏன் படைத்தான் தெரியாதா?
இருளகற்றி ஒளிஎழுப்பப் புரியாதா.?

சிந்தனையை ஒளியிலாக்க அறியாயோ?
சிந்தையினின் கறையகற்ற முயலாயோ?
விந்தைகளை அறிந்துயர விரையாயோ?
வீணுண நினைப்புகளை அழியாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையினை நிலைநிறுத்தத் துடியாயோ?
   தொடர்ந்து நற்கருமந்தனைச் செய்யாயோ?
ஆய கலை படித்துணர முயலாயோ?
   அற்புதங்கள் ஒன்றேனும் நிகழ்த்தாயோ?

நீபிறந்த பயனையென்று அடைவாயோ?
   உன்னுள்ளே இருப்பதைநீ அறிவாயோ?
திக்கிணற்றில் இரும்பை நீ உருக்காயோ?
   திடனுறுதி உள உடலை அடையாயோ?

நாளையது பிறப்பதுவு முனக்காக!
   நான்குதிசை கதிரொலியு முனக்காக!
ஏழையைப்போல் இன்னும் பார்ப்பதெதற்காக!
   இன்றே நீ எழுந்தியங்கு விரைவாக.

சோம்பலை விரட்டியடி இன்றே நீ
   சுறு, சுறுப்பாய் கருமமாற்று நன்றே நீ
வீம்புபேசி நேரமதைப் போக்காதே.
   வெற்றியாளர் வரிசைசேர முன்னேறு

உன்சமூக உரிமைகளை அடைவாய் நீ
   உலகுக்குன் கடமைகளை அளிப்பாய் நீ
துன்மார்க்க நடப்புகளை அளிப்பாய் நீ
   துடிப்புள்ள சமூகத்தைப் படைப்பாய் நீ

இங்குநீ ஏன்பிறந்தாய் புரிவாய் நீ
   இவ்வுலகில் உன்செயலை அறிவாய் நீ
சிந்தனைக்கே நீபிறந்தாய் நினைப்பாய் நீ
   சிறப்பொன்றே உன்னிலக்கு உணர்வாய் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

இளமையின் துடிப்பில்

("இளமையின் துடிப்படக்கித் தூய்மையாய்த் திகழ வேண்டும்" என்றதம் மனக்கருத்தை உணர்ச்சியான ஒரு சம்பவத்தைக் கொண்டு புகட்டுகிறார் இளங்கவிஞர்.)

பெண்ணரசி வீதியுள்ளே
பின்புறமாய் உட்புகுந்து,
எண்ணிய திக்கில் உட
லெழுச்சியால் நடக்கலானேன்.

அன்னங்கள், மயில்கள் பெண்ணுயிர்களின்
அழகைக் கண்டேன்.
வன்னிற நினைப்புக்களின் வடுக்கலால்
வருத்தமுற்றேன்.

இச்சையின் வேகமேற தீ
உண்ணத்தின் அடிமையானேன்.
பிச்சை கேட்பாரை போல
பெண்களைப்பார்க்க லானேன்.

"மறைக்கவும் இயலவில்லை பற்றை
மறப்பதும் சரியுமில்லை" யென்ற
குறையெண்ணம் நினைக்கலானேன்
கறைவழி நடக்கலானேன்.

நண்பர்கள் நம்பினோர்கள்
நல்லுரை பகன்றும் மாயக்
கண்களின்பார்வை சுற்ற,
காமனாய் நடக்கலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமமே குறிக்கோலாக என்
　　காலும் கடுக்கலாச்சு,
நாமத்தையும் மறந்துத் தாக
　　நாயின் இடமடைந்தேன்.

ஆசையால் ஒருத்தியின் கை
　　அங்கத்தைத் தொடவே "நாயே
நாசமாய்போ" எனவே
　　நாடியில் குத்திவிட்டாள்

"நில்லடி கிருக்கி" என்று
　　நெஞ்சாலே கூறவேயான்
"என்னது முனக்க" மென்று
　　என்னம்மா தட்டிவிட்டாள்

நடந்த துறக்கத்திலா?
　　நல்லுணர்விலே வென்று இன்று
கடந்ததை நினைக்கலானேன்.
　　கருத்திலும் ஒளியைப் பெற்றேன்.

இளமையின் துடிப்படக்கி
　　இருந்தால்தான் நன்று என்ற
விளக்கமும் கிடைக்கலாச்சு
　　வெளிச்சமும் வீசலாச்சு,

UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

இதயக் குரல்

(உடம்பில் மிகைத்திருக்கும் காமஇச்சைக்கும் உள்ளத்தில் மிகைத்திருக்கும் இறைபக்திக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தை தம் இதயக்குரலாக வெளிப்படுத்துகின்றார் கவிஞர்)

எண்ணத்தில் எழுந்திடும்
இன்ப வெறியை யான்
எடுத்தெறியத் துணிகின்றேன்
முடியவில்லையே!
திண்ணமாய் நான் நானே,
என்நிலைமையை,
திருத்தி உயர்த்திட,
முடியுமோ நீ சொல்

மனத்தினுள் தோன்றிடும்
உயரறிவையான்
மாண்போடுணர்கின்றேன்
செயலிவில்லையே
கனவினில் தோன்றிடும்
உயர் பொருட்களென்
கண்முன்னே உயிராக
வந்திடுமோ நீ சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகள் மாறும் விரி
நாடகத்தைப் போல்
கள்ளெண்ணம் உறுதியை
மாற்றுகின்றதே
ஆலயத்தில் யான் செய்யும்
நல்வணக்கங்கள்
அக ஒளியை நிச்சயமாய்
அளித்திடுமோ நீ சொல்

வேசங்கள் ஆசைகள்
கொஞ்ச நாட்களே
வேதனையும் சோதனையும்
அதன் பெயர்களே
தேசத்தில் யானும் சிரம்
உயர்த்தி நடந்திட
தமையைத் தள்ளும்
உயர்வழியை நீயேசொல்

காலையும், மாலையும்
கள்ள எண்ணங்கள்
கனவுகளும், நினைவுகளும்
அதன் காட்சிகள்
ஆலயத்தில் விழுவதில்
அர்த்தமே இல்லை
அகத்தினை நற் செயலால்
ஆளுவாய் நியே

இதயத்தின் குரலென
இதை எண்ணுவாயானால்
இன்றே உய ரெண்ணம்
எண்ணி செயற்படு
விதம் விதமாம் பற்றுக்களை
ஒழித்து நடத்திட்டால்
வெற்றி உன் சொந்தம்
இதில் ஐயமே இல்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

என் தாய்

(என்னன்புத்தாயாரின் அறுபத்தேழாவது பிறந்த தினத்தை யொட்டி பாடப்பட்ட பாடல் இது 1900-1967)

பள்ளிக்குச் செல்லவில்லை,
பாடங்கள் கற்கவில்லை
பயன்தரு கலைகள் பல
படிக்கவில்லை ஆனாலும்
பிள்ளைகளைப் படிப்பிக்கத்
தயங்கவில்லை அஞ்சவில்லை
அவரிடத்தில் ஆயிரம்
அனுபவமும் அறிவுமுண்டு

மொழி பயில் எழுத்துக்களோ
எண் பயில் இலக்கங்களோ
முறையாகக் கற்கும் பல
பாடங்களோ படிக்கவில்லை ஆயிடினும்
பொலிவு நிறை தாலாட்டு
இசைத்திடுவார் கணக்கிடுவார்
பூரணமாம் பாடங்களை
வாழ்க்கைக்குப் புகன்றிடுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த அன்னையரும்
வளர்த்தன்புத் தந்தையரும்
கூடப்பிறந்தனைவர்களும்
பிரிந்திடினும் குடும்பத்தின்
நெற்றிநிறை குணங்களுண்டு
நிதமுண்டு
நேரிய குணமு முண்டு
பிடிவாதப் பேச்சுமுண்டு

விழியிலே ஒளி யுண்டு
இடையிலே வலுவுண்டு
விரிந்த உயர் மனத்திலே
பக்தியுண்டு உறுதியுண்டு
பழிக்கும் சொற்களில்லை
பழமையை விடுவதில்லை
பழிகூறும் வார்த்தைக்கு
வார்த்தையும் கூருமல் விடுவதில்லை

தீமையைக் கண்டிட்டால்
சினந்திடுவார் வெகுண்டெழுவார்
திருத்தும் நற்போதனைகள்
தன்மொழியில் புகன்றிடுவார்
சீமைக்குப் போயிடினும்
சிந்தைக்கு இறையெண்ணம்
சிறப்பாகக் கொண்டிருப்பார்
வேண்டு மென்பார்

வையத்தில் அறுபத்து
ஏழாண்டு கடத்திடினும்
வைகரையில் எழுந்திடுவார்
வல்லவனை வணங்கிடுவார்
மையிருள் எழும்வரையில்
விசைபோலியங்கிடுவார்
மருமக்கள் வேண்டா மென்
றுரைத்திடினும் ஏற்கமாட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரத்தில் பேசிடினும்
அன்புக்கு எல்லையில்லை
அகத்தினிகே தாழ் வெண்ணம்
சற்றுமில்லை; ஐயமில்லை
கவனமுடன் தவநிலையில்
கருணையுடன் பற்றறுத்து
களிப்புடன் வாழ்பவரே
இங்கென்னைப் பெற்றவராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

இலட்சிய மனைவி

(தமது வருங்கால இலட்சிய மனைவியைப் பற்றி சிந்தித்த கவிஞர் நல்லொழுக்கத் துறையில் வாழ்கையின் சகல அம்சங்களிலும் அவள் எவ்வாறு இயங்க வேண்டு மென்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார் திருமண மாகாத ஆண், பெண் மாத்திரமல்ல திருமணமான அனைவருக்கும் கூட நற்போதனைகளைப் புகட்டவல்ல உயர் பாடலாக இது அமைந்துள்ளது)

எதிர் வரும் காலத்தில்,
என்னோடு வாழவரும்
என்னருமைப் பெண்ணை,
இன்றே யான் எண்ணுகிறேன்
"எதுவரினும் தன்னுரிமைக்
கணவனே தன்தலைவன்
இறைவனை யடுத்து
அவனே தனக்கெல்லாம்
இதமான ஆனுக்குத்,
தாயின் பின் தாரம்
இலட்சியப் பெண்ணுக்கு
அணைத்தவன் பின் அனைத்தும்"
இதையென்றும் நினைக்கும்
பண்மனைவியே நல்இல்லாள்
இவளே நற்கணவனின்
உயர் இலட்சியப் பெண்ணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியப் பெண்ணின்
கற்பே பதிபக்தி
இணைந்துள்ள தலைவன்
நல்வழியே தம் மொழியாம்
சாயத்தை உதட்டினிலே
போடாதே என்றால்
வாய்மையுள்ள பெண்ணென்றால்
பதி ஆணை ஏற்பாள்
"நாகரீக வழியினிலே
சாயமிட்டு வாழ்வேன்"
என்று கூறும் பெண்ணுக்கு
நற்பெயரிங்கில்லை
இலட்சிய உதாரணத்தில்
விளக்க மொன்று சொன்னேன்
இலட்சியமே இதுதானென
நினைத்திடாதே என்றும்

வைகரையில் எழுந்து இறைக்
கடமைகளை முடித்து
வாழும் தம் மன்பரைத்
தம் தொழிலுக் கனுப்பக்
கைவிசைபோல் சமையெல்லாம்
நல்முறையில் செய்து
கடமையே தம்முயிரென்று
வாழ்பவளே இல்லாள்
அண்டை வீட்டார் சுற்றத்தார்
அனைவருடன் என்றும்
அன்பான புன்முறுவல்
நற்குணமாய் நடந்து
சண்டைகளை நீக்கி நிதம்
சற்குணமாய் நடந்து
சமரசமாய் வாழ்ந்து
நற்பேர் பெறலே இன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண்பேச்சு ஊர்க்காட்சி
பேசுவதை விடுத்து
வேகமிகு காலத்தை
நற்பயன் படுத்தி
காண்பவர்கள் நல்விதமாய்
பேசநற் செயல்கள்
கண்கவரும் தையல்
வீடழகு படுத்தல்
மாண்புமிகு நற்கருத்தில்
அழகோடு செய்து
மாயைமிகு இவ்வவனி
ஆசைதனைக் குறைத்து
ஆண்களது முன்னிலையில்
கீழ்நோக்கி நடந்து
ஆண்டவனின் அருள் பெற
வாழ்ந்திடலே நன்றும்

தன்தலைவன் தவறுதலாய்
நடந்துவிடும் போழ்து
தன்மையுடன் நல்விதமாய்
அவன்வழி திருத்தி
அன்புடனே இன்முகமாய்
அவனுயர்வு எண்ணி
அயராது வாழ்வினிலே
செயலாற்றுவதே இன்பம்
என்றும் நற்சமூகப்
பழக்கங்களை ஏற்று
எதிலும் தம் தனித்துவத்தை
விட்டுவிடா தொழுகி
நன்னபி சாந்திவழி
விதிகளுக்கேற்ப
நல்விதமாய் நடப்பவளே
உயர்ந்த ரகப் பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பெற்றோர் தன்குடும்பம்
நல் அன்பைப் பெற்று
தன்தலைவன் குடும்பமதும்
நல்வார்த்தை கூட
சன்மார்க்க நண்ணெறிகள்
முறையினோடு வாழ்ந்து
சாந்தியினை உள் வெளியில்
கண்டிடலே சாந்தி
அன்பினால் விளைந்த
ஆண்பிள்ளை அவதரித்தால்
அவர்களின் நல் ஒழுக்கம்
"தம்வளர்ப்பு" என எண்ணி
தன்மையாய் நற்கல்வி பெற
இராப்பகலாய் முயன்று
தரமான தொழில் செய்ய
ஆக்குவதே பேரின்பம்

பெண்களின் நற்பெண்களாகப்
பிள்ளைகளை வளர்க்கப்
பெருமானுருரைகட் படி
மார்க்கமதைப் பயிற்றி
எண்ணத்தை விரிக்கப்
புவிகல்வியையும் பயிற்றி
ஏற்றமான வாழ்வு வாழ
உதவுதலே கடமை
வண்ணமான இலட்சியங்கள்
காலத்திற்குக் காலம்
வளமான கருத்தோடு
நல்விதமாய் தீட்டி
கண்மூட முன்னே நற்
கருத்தாய் நிறைவேற்றி
மரணத்தை வரவேற்பவளே
உயர் இலட்சியப் பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்தில் எதற்காக
    யாம் அவதரித்தோம்?
வாழ்வினது உண்மையினை
    காண்ப தெவ்வாறு?
மையிருளில் விழுந்துவிட்டால்
    மறு ஒளி ஒன்றுண்டா?
மானிலத்தில் யாம் எத்தனைச்
    சாதித்திட வேண்டும்?
தையலரின் வாழ்க்கை ஒளி
    எவ்வெவற்றிலுண்டு?
தன்தகைமை இவற்றினிலே
    எதனெதனிலுண்டு?
கைநிறைந்த முத்தினைப் போல
    நல்விடைகள் கண்டு
காண்பவர்கள் புகழ்ந்துரைக்கச்
    செயலாற்றிடலே வாழ்வாம்

—✶—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

களங்கமில் உள்ளம்

(குழந்தையின் கள்ளமற்ற உள்ளத்தை உன்னிய கவிஞர் தம் எண்ணத்திலெழுந்த தத்துவக் கருத்துக்கள் சிலவற்றை கவியாக வடித்துள்ளார்)

உள்ளத்தின் கள்ளம் யாவும்
    உணர்ந்து யாம் திருந்திவிட்டால்
பிள்ளையின் வெள்ளை உள்ளம்
    பெறுவது போன்றிருக்கும்.

எல்லையில் இயற்கைக் காட்சி
    இயம்பிடும் பொருளறிந்தால்
கிள்ளையர் குழந்தை போன்று
    வந்திட விரும்புவோம் நாம்.

எல்லாமே மாயை யென
    இயம்பிடும் பக்திமான்கள்
கல்லாத மலையை மண்
    மாயை யென இயம்பமாட்டார்

நில்லாது உதைக்கு மந்த
    நன்மகவு புன்குரும்பைப்
பொல்லாத கள்வர் தாமும்
    புறக் கணிக்க முயலமாட்டார்.

எல்லோரும் போற்றும் நல்
    இயல்புள்ள கல்விமான்கள்
கல்லாத மலையின் நற்
    கருத்தினையே போற்றிநிற்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாடும் சிளப்பருவத்
தளர்வான முதியோர் கூட
பள்ளமில் இதயமுள்ள
பாலகரயே விரும்பி நிற்பர்

இல்லாத எளியோரும் தம்
இல்வாழ்வின் இன்பததுக்கு
இல்லத்தில் துள்ளுமந்த
இன்னமுதே காரணமாம்.

—★—

UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

மறையும் நிழல்கள் நாம்

("காணும் பொருட்கள் அனைத்தும் அவ்வவற்றின் கரையும் தன்மையைப் பறை சாற்றிக் கொண்டிருப்ப தோடு நாம் எல்லோரும் மறையும் நிழல்கள் என்பதை யும் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றன. என்ப தையாம் நினைவுறுத்தவேண்டும் "எமது ஆத்ம சாந்திக்கு நல்வழியின்பக்கம் நாம் விரையவேண்டும்" என்ற கவிஞ ரின் மனக்கருத்து இப்பாடலின்மூலம் நன்ருகத் தெரிகின்றது.

காலம் கரையும் வேகத்தை
காற்றின் அசையுந் தன்மையை
நீலக்கடலின் அலறலை
நெருப்பின் அழிவுப் போக்கினை
சிலங் கொண்டு நெஞ்சினில்
சிந்தித்து நாம் ஆய்ந்திட்டால்
நால் ஓட்டம் விரைவினில்
நிற்கும் சுருக்கை அறியுவோம்.

ஊர்ந்து வாழும் இனத்தினை
ஓடி ஆடும் விலங்கினை
சேர்ந்துமகிழும் பறட்பனை
சிறப்பாய் நிந்தும் குழுவினை
ஓர்ந்து நன்ருய் சிந்தித்தால்
உண்மை ஒன்று விளங்கிடும்
ஈர்ப்பு உலகில் மனிதனின்
இறப்பு என்றும் நிச்சயம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive 1
Negative 11082.
Reel No.
Date; 4/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மை நெஞ்சு அடைய நாம்
துயர்கள் யாவும்களைய நாம்
வாய்மை செயல்கள் செய்ய நாம்
வாழ்க்கை வெற்றி அடைய நாம்
சேய்மை நோக்கு அறியநாம்
சிறந்து பாரில் விளங்க நாம்
தேய்வாய் நிழல்கள் நாமென்றும்
திடமாய் மனத்துள் எண்ணுவோம்.

மறையும் நிழலகள் நாமென்று
மனத்திலென்றும் கொண்டிட்டால்
கறைகள் நீக்கிவாழ்வினில்
கடவுளன்பைப் பெறலாம் நாம்
இறையாம் அவனின் அன்புக்கே
இருமை என்றும் துணைசெய்யும்
நிறையாய் புவியில் நடந்து நாம்
நிமலன் அன்பைப் பெறலாமே.

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative
Reel No. 11062.
Date; 4/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
26-4-1972
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALBION PRESS LIMITED,
No. 157, Jayantha Weerasekara Mawatha,
Maradana, Colombo-10.

286437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org